OS No. 34/2015, நாள்: 29.01.2020

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அரியபூபதி | வயது | : 61 |
| தந்தை பெயர் | : ஆறுமுக கவுண்டர் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : புளியம்பட்டி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

வா.சா.1 ___ அரியபூபதி. ஆஜர் . குறுக்கு விசாரணை :-

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.இ அக்ரி படித்துள்ளேன். இவ்வழக்கின் சொத்து விவரம் எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். வழக்குசொத்தை பட்டாளம்மன்கோயிலுக்கு யார் கொடுத்தது என்றால் அது அரசாங்க சொத்து. மானியமாக பட்டாளம்மன்கோயிலுக்கு கொடுத்தது. எந்த ஆண்டு என்றால் எனக்கு ஞாபகமில்லை. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு என்றால் சுமார் 100 ஆண்டுகளுக்குமேல் இருக்கும். அந்த நிலத்தை கோவிலுக்கு ஒப்படைத்தவுடன் யார் அனுபவித்து வந்தார் என்றால் கோவில் பூசாரி அனுபவித்து வந்தார். அவரே விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் குத்தகைக்கு விட்டு அதில் வந்த வருமானத்தை வைத்து கோவிலுக்கு செலவு செய்து வந்தார். கோவில் எந்த ஆண்டு, எங்கு வைத்து குத்தகைக்கு விட்டார் என்றால் 1964ம் ஆண்டு ஆறுமுக கவுண்டருக்கு குத்தகைக்கு விட்டார். ஆறுமுக கவுண்டர் இவ்வழக்கின் வாதி. என்னுடைய தந்தை. 1964 ஆண்டு குத்தகைக்கு

விட்டதற்கு ஆவணம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. இவ்வழக்கில் அதை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அதை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் 1975ம் ஆண்டு இவ்வழக்கில் தாக்கல் செய்து அதை திரும்பபெறமுடியாமல் போய்விட்டது. அந்த விவரத்தை வழக்கிலோ முதல் விசாரணையிலோ கூறியிருக்கிறேனா என்றால் இல்லை. முதல் குத்தகைக்கு எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை எழுதப்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. எத்தனை முறை அவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டது என்றால் மீண்டும் 1970ம் ஆண்டு விடப்பட்டது அது பதிவு செய்யப்பட்டது எத்தனை ஆண்டுகளாக அது பதிவு செய்யப்பட்டது என்றால் குத்தகை நிர்ணயம் செய்து பதிவு செய்யப்பட்டது. 1970 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட குத்தகை ஆவணம் என் வசம் உள்ளதா என்றால் இல்லை. அதுவும் நீதிமன்றத்தில் தான் உள்ளது. 1975ம் ஆண்டு குத்தகை முடிந்த பின்னிட்டு மீண்டும் குத்தகை எதுவும் போடவில்லை என்றால் சரிதான். 1970 ம் ஆண்டு எவ்வளவு குத்தகை நிர்ணயம் செய்பட்டது என்றால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500/- என நிர்ணயம் செய்யப்பட்டது. வருவாய் துறையினரால் குத்தகைத்தாரர் என்று முடிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்று ஏதாவது இவ்வழக்கில் ஒப்படைக்கப்பட்டதா என்றால் அந்த ஆவணங்களும் 1975-ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆவண்ஙகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் 1975ம் ஆண்டுக்கு முன்பு நான் பார்த்திருக்கிறேன். குத்தகைதாரர் என்று எந்த தேதியில் வருவாய் துறையினரால் உத்தரவிடப்பட்டது என்றால் 31.08.1972-ம் தேதியில் சிறப்பு துணை வட்டாட்சியரால் உத்தரவிடப்பட்டது. நாங்கள் சுவாதீனத்தில் இருப்பதாகவும், பயிர் செய்து வருவதாகவும், எந்த ஆண்டு முதன் முதலில் அடங்கல் கணக்கில் பதிவு செய்யபட்டது என்றால் 1973ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. எந்தெந்த ஆண்டில் அதுபோல அடங்கல் பதிவேட்டில் பதிவு

செய்யப்பட்டது என்றால் தொடாச்சியாக ஒவ்வொரு ஆண்டும் பதிவுசெய்யபட்டது. எந்த ஆண்டு வரை அது பதிவு செய்யபபட்டது என்றால் 2015- 2016 வரை பதிவுசெய்யப்பட்டது. 1973 ம்ஆண்டிலிருந்து 2016 வரையில் எங்கள் அனுபவத்தில் இருந்ததற்கு அடங்கல் கணக்கில் எதாவது தாக்கல் செய்திருக்கிறனோ என்றால் 2013 ம் ஆண்டு பெறப்பட்ட அடங்கலை தாக்கல் செய்திருக்கிறேன். 1973 முதல் 2012 வரையிலும் 2014 முதல் இன்றைய தேதிவரையிலும் அடங்கல் கணக்குகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் கணக்கு வா.சா.ஆ.5. கிராம நிர்வாக அலுவலரால் வழங்கபட்டதால் அது சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வருவாய் துறையினால் பராமரிக்கப்படும் ஆவணங்களில் நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் கணக்கில் உள்ளதுபோல் பதிவுகள் இல்லை என்றுசொன்னால் சரியல்ல. வாதி நிரந்தர குத்தகைத்தாரர் இல்லை என்றும், வழக்கு சொத்தில் சுவாதீனத்திலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு இல்லாதாததால்தான் சுவாதனீத்திற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கோவில் இந்து அறநிலையத்துறையினால் பராமரிக்கப்படுகின்றனவா என்றால் இல்லை. கோவில் நிர்வாகத்திற்கு தர்மகர்த்தா இருக்கிறார்களா என்றால் இல்லை. கோவில் தர்மகர்த்தாவாக யார் பார்த்து வந்தது என்றால் 1960ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டுவரை என் தந்தை பார்த்து வந்தார். அதற்கு முன்பு என் தாத்தா பார்த்து வந்தார். தற்போது ஊர்மக்கள் சேர்ந்து பார்த்து வருகிறார்கள். ஒவவொரு ஆண்டும் திருவிழா நடைபெறுமா என்றால் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் நடைபெறும். என் தாத்தா பார்த்து வந்த பின்பு 30, 40 ஆண்டுகள் யாரும் கவனிக்கவில்லை. அதற்கு பின்னிட்டு என்தந்தை தான் பொறுப்பேற்று தர்மகர்த்தவாக செய்து வந்தார். ஆனால் அந்த பெயரில்

இல்லை. அந்த கோவிலின் கணக்கு வழக்குகள் வரவு செலவு ஏதாவது உள்ளதா என்றால் இப்போது இல்லை. என் தந்தை தன்னுடைய சொந்த செலவிலேயே அனைத்தையும் செய்தார். தற்போது யார் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் ஊர் மக்கள் சிலர் சேர்ந்து செய்து வருகிறார்கள். 2015ம் ஆண்டு கோவிலை கட்டி கும்பாபிஷேகம் செய்தார்கள். அந்த கோவிலை எந்த பணத்தில் கட்டினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் வரவு செலவு செய்து வந்தது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். தாவாசொத்து குறித்து எந்தெந்த நீதிமன்றங்களில் என்னென்ன வழக்கு நடைபெற்றது என்றால் தெரியும். 1975ம்ஆண்டு அசல் வழக்கு எண். 345/1975 -ஐ என் தந்தை தாக்கல் செய்தார். கோவிந்த பூசாரிக்கும் சகாதேவனுக்கும் எதிராக தாக்கல் செய்தார். அ.வ.எண்.461/85 வழக்கை கோவிந்தன் பூசாரி என் தந்தை மீது தாக்கல் செய்தார். அ.வ.எண்.552/85 வழக்கையும் அவரே என் தந்தை மீது தாக்கல் செய்தார். இதை எதிர்த்து என் தந்தை ஏ.எஸ்.எண்.59/1994 என்ற மேல் முறையீட்டை தாக்கல் செய்தார். அதில் தான் இறுதியான தீர்ப்பு வழங்கப்பட்டது. நான் தாக்கல் செய்த மேல் முறையீடு அனைத்து வழக்குகளுக்கும் மேல்முறையீடா என்றால் அ.வ.எண்.552/85க்கான மேல் முறையீடு. மற்ற வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்புகளுக்கு எதிராக மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் அ.வ.எண்.345/75ல் என் தந்தைக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அ.வ.எண்.461/85ல் யாருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. மற்ற இரண்டு வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்புபற்றிய ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குகளை தவிர வருவாய் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டதா

என்றால் சேலம் உதவி ஆட்சியர் வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அது எந்த ஆண்டு யாரால் தாக்கல் செய்யபபட்டது என்றால் 1993 ம் ஆண்டு வாதிதான் தாக்கல் செய்தார். என்ன பரிகாரம் கேட்டு அந்த மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் குத்தகைக்காகவும் அ.வஎண.461/85ன் தீர்ப்பை ரத்து செய்யவும் தாக்கல் செய்யப்பட்டது. அது தள்ளுபடி யாகிவிட்டது. எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரையிலான குத்தகையை தள்ளுபடி செய்வதற்கு அந்த மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 1980 முதல் 1993 வரையிலான ஆண்டுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டது. குத்தகையை செலுத்துவதற்கு வருவாய் நீதிமன்றம் வாதியை அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு அதில் பிறப்பித்த உத்தரவு ஆகியவற்றின் நகல்கள் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. அவற்றை இவ்வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்யாத காரணம் என்னவென்றால் வாதிக்கு சாதகமான உத்தரவாக இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. சார் ஆட்சியர் உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளமோ என்றால் இல்லை. சார் ஆட்சியர் எந்த தேதியில் உத்தரவு பிறப்பித்தார் என்றால் 1993 ம் ஆண்டு பிறப்பித்தார். 1993 ம் ஆண்டுக்கு பின்னிட்டு குத்தகை செலுத்துவதற்கு நாங்கள் உத்தரவு ஏதாவது பெற்றுள்ளோமா என்றால் அனுமதித்துதான் கட்டி வருகிறோம். எந்த ஆண்டு அந்த உத்தரவை பெற்றோம் என்றால் எனக்கு நினைவில்லை. என்னடைய வழக்கிலோ முதல் விசாணையிலோ வருவாய் துறையினர் அனுமதியின் பெயரில் குத்தகை செலுத்துவதாக எங்காவது கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பெயரில் செலுத்துவதாக கூறியிருக்கிறேன். எந்த ஆண்டு எந்த ஆட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் 1977ம் ஆண்டு ஒசூர் சப் கலெக்டர் கொடுத்த உத்தரவு. எத்தனை ஆண்டுகளுக்கு அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் வட்டாட்சியர்

பிறப்பித்த உத்தரவுக்கெதிராக மாவட்ட ஆட்சியரின் மேல் முறையீடு செய்து அதில் தள்ளுபடி செய்த உத்தரவுதான் 20.7.1977ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவு நகல்கள் என்வசம் உள்ளதா என்றால் உள்ளன.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.